492
492

ஸ்ரீரஸ்து.

தென்னத்தியூரராம் நம் பேரருளாளனுடைய
பெருமையைக் குறைத்துரைத்தவர்களின்
செருக்கை யடக்குவதான

சேட்லூரார் மாய மயக்கம்.

OF THE REGIST...

பெருமாள்கோயில் ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்
இயற்றியது.

சென்னை:
ஹாடன் அண்டு கம்பெனியில் அச்சிடப்பட்டது

ஸ்ரீமுக ஹூ மார்கழிமீ — கீழ்வானம்.
1933
...தன் விலை 0—3—0.]

922
N83
176655

ஶ்ரீரஸ்து.

ஶ்ரீஹஸ்திஶைலஶிகரோஜ்ஜ்வலபாரிஜாதாய நம:.

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஶ்ரீமல்லோககுரவே நம:.

ஶ்ரீமந்நிகமாந்த தேஶிகாய நம:.

ஶ்ரீமத்வரவரமுநயே நம:.

ஶ்ரீவாதிபீகர மஹாகுரவே நம:.

OFFICE OF THE REGISTRAR ...
25 OCT 1934
MADRAS

சேட்லூரார் மாய மயக்கம்.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் ஸ்வாமியைப் பெரும்பாலும் பலரும் அறிவர். இவர் எழுதி வெளியிட்டிருந்த நூல்களில் ஸத்ஸம்ப்ரதாய ஸதாசார்யர்களைப்பற்றின தூஷணங்கள் பலபல காணப்பட்டமையால் இவருடைய அஜ்ஞாநம் அந்யதாஜ்ஞாநம் முதலியவற்றைப் பண்டிதவுலகில் பிரசுரப்படுத்தப் புகுந்த அடியேன் சில வருஷங்களுக்கு முன்னே சேஷாவதாரச் சிறப்பு, வாத்ஸல்யார்த்த விவரணம், ஸ்தோத்ர வ்யாக்யாநசோதநம் முதலிய நூல்களை வெளியிடலானேனென்பது வித்வான்களனைவருமறிந்த விஷயம்.

சேட்லூராருடைய க்ரந்தங்களின்மீது சாஸ்த்ரீய ஸரணியில் குற்றங்குறைகள்காட்டி அடியேன் எழுதி வெளியிட்டுள்ள அந்த நூல்களில் உள்ளவிஷயங்களுள் ஒன்றுக்காவது இவர்விடையளிக்க வல்லரல்லர் என்பது பண்டித கோஷ்டிகளில் ப்ரஸித்தம். இது நாம் பெருமையாக எழுதிக்கொள்ளுகிற விஷயமன்று. உண்மையில் ஒரு க்ரந்த மரியாதையையும் செவ்வனே தெரிந்துகொள்ளாதவிவர் ஸர்வாத்மநா அஸம்பத்தமாகவே ஒவ்வொன்றையும் எழுதி வைத்திருக்கிறாரென்பது அடியேனுடைய ஒவ்வொரு நூலிலும் மிக விசதமாகவே விளக்கப்பட்டுள்ளது. பிரமாண புஞ்ஜங்களைக் கொண்டே இவருடைய ஒவ்வொரு துருக்தியையும் நிரஸித்திருக்கிறேன். அத்தகைய அடியேனது நூல்களைக் கண்ட இவர் தமது தவறுகளுக்கு அநுதபித்து அடியேன்பால் மாத்ஸரியம் சிறிதும் வஹியாமல் ப்ரேமமேகொண்டு ஸௌஹார்த்தத்தை விரும்பினர்.

இரண்டொரு ஸம்வத்ஸரத்திற்குமுன் அடியேன் திருவஹீந்திரபுரம் விடைகொண்டிருந்தபோது பரம ப்ரீதியைக்காட்டி ஸம்பாவித்ததுமன்றி, கடிதப்போக்குவரத்தும் ஏற்படுத்திக்கொண்டார். அந்த ஸமயத்தில் இந்த ஸ்வாமி அடியேனுக் கெழுதியனுப்பின ஒரு பத்ரிகையை இதில் வெளியிடுகிறேன் காண்மின்;—

"ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேசிகாய நம:.
ஸ்ரீமதே [illegible] மஹாதேசிகாய நம:.

மஹாமஹோபாத்யாய
பண்டித பூஷணம்
பகவத்விஷயம்
தேசிகதர்சநாசார்ய
சேட்லூர் நரஸிம்ஹாசாரியர்.

ஸ்ரீவேதாந்ததேசிக விலாஸம்.
திருவஹீந்திரபுரம்.
தேதி 22

ஸ்ரீசதி[illegible] ஸவஸவாயாஶணவஷஹ்ரஂதாஂ வஹ்ர உயவஶிஷாநாஂ தத்ஶவதாஂ வஞியளஊாவொய உநக வரணாஶவஎவுகஂ விஜ்ஞாவயதி. ஸ்வாமி நியமித்த ஸ்ரீமுகத்தை ஸேவித்துக்கொண்டேன். ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருவுள்ளத்தில் வெறுப்புண்டாகுப்படி செய்தது வல்வினையேன் குற்றமேயன்றே. வாஸ்தவமாகவோ ஆரோபிதமாகவோ சூவாயபூாவஶாயம் அடியேன் மநஸ்ஸில் வரதிஸாஸித்ததினால் திருவுள்ளத்துக்கு வெறுப்பும் நிவெடுஉமும் உண்டாகுப்படி செய்ய நேரிட்டது. அதுவும் பரமனைப்பயிலுந் திருவுடைய ஹாஶவதர்களுடைய "ஶஊாநாஂதா ஶஹெஉஹி" "ஸஂஸஶஜ தெயதிவ ஊாஸஜநஹூீய:" என்று ஆசார்யனால் வராயிதமாய் ஃவவதஉஶாநிவிதுஶெஷமுமான பெருப்பேருகிய ஹாஶவதாநுஶஹத்துக்குப் பாத்ரமாகாதபடி செய்வதற்குரிய ஹஶவநிஶஹ ஸங்கல்பமொழிய வேறு ஒன்றுமில்லை. ஆதலால் இவ் விஷயத்தில் "யது ஶொகாஹிஹஎதஸ ஶ்ரூகவாஶாஉஸ ஹாஷிதழ | உயாகவஂ வஶஷாணஞ: தவுகவஂ கூஉஹவி" என்கிற இளையபெருமாள்படியை இச் சேதநவிஷயத்தில் திருவுள்ளம்பற்றி அடியேனுடைய அபசாரங்களை ஸொவாயிகங்களாக்கி யஶாவஎவூஂ அடியேனை வஹ்ரஉயனாய் திருவுள்ளம்பற்றும்படி வராயிக்கிறேன்.

ஊ.ஹூ விஜ்ஞாவயதி ஸாமவ தவியெயஃ,''

என்கிற விதுதான் சேட்லூர் ஸ்வாமியின் திருமுகக்காபி.

இங்ஙனே ஸ்வவாரக்ஷாமணம் செய்துகொண்ட இந்த ஸ்வாமி பக்கலில் அடியேனும் ஶாஜஸாவம்மதொஉஸவழ. இவர் சென்ற வைகாசிமாதத்தில் தேசிகனுடைய ஹஸ்திகிரிமாஹாத்மிய ப்ரபந்தத்திற்கு உரை என்று ஒரு புஸ்தகம் தம் பெயராலும், "ஸ்ரீ தேசிகனும் அவருடைய ஸ்ரீஸூக்திகளும்" என்றொரு புஸ்தகம் தமது மாணுக்கரொருவர் பெயராலும் வெளியிடுவித்தார். இவ்விரண்டு புஸ்தகங்களும் அடியேனுடைய பார்வைக்கு வந்தன.

அடியேனுடைய வித்யாசாலையில் நித்யப்படியாய் ஒருமணிகாலம் வித்யார்த்திகளுக்கு நாநாவிஷய விசாரபரங்களான உபந்யாஸங்களை அடியேன் போயிப்பது வழக்கம். அந்த வழக்கப்படியே மேற்குறித்த (சேட்லூர் ஸ்வாமியின்) இரண்டு புஸ்தகங்களைப்பற்றியும் விரிவாகப் பதினைந்துநாள் உபந்யாஸங்கள் நடத்தினேன். அவற்றை மாணுக்கரொருவர் [ஸ்ரீசைல கிருஷ்ணமாசாரியர்] ஸங்க்ரஹித்து இரண்டு பகுதியாக வகுத்து 'சேட்லூர் தாண்டவகண்டநம்'' என்னும் பெயர்பூண்டதொரு புஸ்தகத்தை ஆறுமாதங்களுக்குமுன் வெளியிட்டார். அதிலுள்ள ஐம்பத்திரண்டு விஷயங்களுள் ஒன்றுக்கும் ஒரு அக்ஷரமும் வாய்திறக்க வழியில்லை யென்பது விவேகிகளுக்குத் தெரியும். சேட்லூராருடைய ஹ்ருதயத்திற்கும் தெரியும். ஆனதுபற்றியே அவர் அந்தத்தாண்டவகண்டனநூலில் (பக்கம் 30-ல்) "கூாஷீஂவீக்ஷ ஹநு நிஜெ ஷைஷாக்ஷாராஞுநெஸ்ஂக்ஷியாகூ'', என்று தெரிவித்திருந்தபடியே தலைக்கட்டிவிட்டோ "விஶெஷத ஸ்வவிஊாஂவஊஜெ விஹஷணஂ உஊநழ'' என்பதை ஸ்மரித்தோ வாளா இருந்திட்டார்.

அப்படி யிருந்தவரை அவ்வூர் வைதிகர்கள் "அந்தோ! இப்படியும் ஒரு பரிபவத்திற்குப் பாத்திரமாகலாமோ? அடங்கிநின்றாலும், திருக்குடந்தையார், புத்தங்கோட்டார், மன்னார்குடியர், சித்திராபர்வர் முதலானாரைப்போலே சிறிது சப்தம் செய்துவிட்டாவது அடங்கக்கூடாதா? கப்சிப்பென்னுமல் இப்படி ஒரே

ஹ்ராஸத்தில் கவளமாகிக் கழிவதுமுண்டாயிற்றே!" என்று கை தட்டிச் சிரிக்கவே, தாமும் அன்னவர்களுடைய ஹஹாவளியிலே அந்வயிக்கவேண்டி வேற்றுப் பெயராலே இப்போது ப்ரலாபகண் டனமென்று ஒரு தூஷணபுராணம் வெளியிட்டுள்ளார்.

தாண்டவகண்டன க்ரந்தத்தை அடியேன் ஸொந்தப் பெய ரால் வெளியிட்டுக்கொள்ள அஞ்சி அயலார் பெயரால் வெளியிடு வித்துக்கொண்டதாக எழுதுகிறார். எப்போதும் யாரிடத்திலும் அடியேனுக்கு யாதொரு பயமும் இல்லை. இதுவரை அடியேன் எழுதிய புஸ்தகங்களுக்குமேல் வெளியிட்டுள்ளேன். அடியேனே ஸ்வஹஸ்தலிகிதமாக நிருமிக்கும் நூல்கள் ஸொந்தப்பெயரால் வெளிவரும். அடியேனது உபந்யாஸாதிகளை ஸங்க்ரஹித்து மாணுக்கர் முதலியோர் எழுதும் நூல்கள் அவர்கள் பெயரால் வெளிவரும். அவற்றிலுள்ள விஷயங்கள் யாவும் சாஸ்த்ரீயங்களே—ப்ராமாணிகங்களே—பிறரால் சிறிதும் அசைக்கமுடியாதவைகளே-என்பதை அடியேன் எந்த ஸமயத்திலும் எந்த இடத்திலும் நன்றுநின்று ஸ்தாபிக்கத் தடையே கிடையாது.

பிலக்ருத தாண்டவ கண்டனத்திலுள்ள விஷயங்கள் பெரும் பாலும் அடியேன் உபந்யஸித்தவைகளேயாதலால் நிஸ்ஸம்சயமாக எவ் விடத்தும் வந்து நின்று நிரூபித்து வாய்தகர்க்க ஸித்தனுகவே யிருக்கிறேன். தாண்டவகண்டனத்தில் ஒவ்வொருவரியும் க்ரந்த விஷய விசாரபரமேயன்றி வேறில்லை. சேட்லூர் ஸ்வாமியை அதில் கடுமையாகத் தூஷித்திருக்கிறதாம். ஆங்காங்கு அவரு டைய ஞான ஸூழல்களை விளக்கிக்காட்டியிருப்பது வாஸ்தவம். அவற்றை சாஸ்த்ரப்ரமாண நிதர்சந நிரூபணங்களினுல் பரிஹரிப் பது பண்டிதக்ருத்யம். இப்போது இவரால் [அல்லது இவர் மாணுக்கரால்] வெளியிடப்பட்டுள்ள சுவடி 25 பக்கங்கள் கொண் டது. சேட்லூர் ஸ்வாமி உண்மையில் பண்டிதராகவும் ப்ராமா ணிகராகவும் தாண்டவகண்டனத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள தவறுகளை நிரஸித்து ஸ்வோக்திகளை ஸமர்த்தநம் செய்துகொள்ள ஸமர்த்தராகவுமிருந்தால் அந்த 25 பக்கங்களில், 52 தூஷணங் களுக்கும் அழகாக ஸமாதானம் நிரூபித்திருக்கலாம். அது எப் படி ஸாத்யமாகும்? எத்தனைபிறவி யெடுத்தாலும் இவர் தூஷணங் களினுல் ஏடுகளை நிரப்ப நிபுணராவரேயன்றி ஒருவிஷயத்திற்கும்

ஜுவான வழியில் நின்று ஸமாதானம்சொல்ல ஈஷத்தும் சக்த ராகமாட்டாரென்பதை அடியேன் சபதம்பண்ணிச்சொல்லுவேன்.

சென்னையில் கோமடம் ஸ்ரீநிவாஸாசாரியர் என்று ஒருவராம். இவர் சேட்லூர் ஸ்வாமியின் தொண்டராம். அவருடைய நூல் களை இவரே அச்சிட்டு வியாபாரம் செய்பவராம். இவரை நாம் நேரில் கண்டறியோம். இவர் நமக்குச் சில கடிதங்கள் எழுதவும் நாமும் இவர்க்கு எழுதவும் நேர்ந்தது. இவருடைய யோக்யதை, அதிகாரம், தொழில் முதலியன நாடறியும். அப்படிப்பட்ட விவர் நம்மை வாதத்திற்கு வருமாறு கடிதமெழுதினர். அதற்கு நாம் பதில் விடுத்தோம்;—"தேவரீரோடு வாதம் செய்ய அடியே னுக்கு அவ்வளவு யோக்யதையில்லை; அடியேனுடைய உயிர் நண் பான ஸ்ரீமதுபயவே. சேட்லூர் ஸ்வாமியோடு ஸமயம்வாய்க்கு மாகில் ஏதோ என் புத்திக்கு எட்டினதை விண்ணப்பம்செய்து கொள்வேன்" என்று.

அதற்குப்பிறகு அந்தக் கோமடர் சிசுபாலன் வாய்க்கும் எட் டாத பல மொழிகள் நிறைந்த கடிதங்களை அடிக்கடி நமக்கு அனுப் பிக்கொண்டிருந்தார். அவரே இப்போது "அண்ணங்கராசார்யர் வகையராக்களுக்கு ஓர் பஹிரங்கக்கடிதம்" என்று வீண் அட்ட ஹாஸங்களுடன் அச்சிட்டு விளம்பரஞ்செய்து வாத விவாத ஸங்ரா ஹங்கள் செய்வதாகக் காட்டுகிறார். தமக்கு எந்தக் கல்வியில் பயிற்சியோ [அதாவது எந்த அஷ்டகத்தில் பழக்கமோ] அதில் தாம் கைதேர்ந்துள்ளமையையும் காட்டுகிறார், அதெல்லாம் கிடக்கட்டும்.

தாண்டவகண்டனத்தில் அலசியலசி விளக்கிக்காட்டி யிருக் கின்ற 52 விஷயங்களில் இரண்டு மூன்று விஷயங்களுக்கு பதில் தெரிவிப்பதாக எழுதி வெளியிட்டிருக்கும் அம்ஸங்கள் அஜ்ஞர் களுக்கும் த்ருப்தியை விளைக்கமாட்டாதவை என்பதை இங்கு நிரூபிக்கவேண்டிய ஆவச்யகதை அடியேனுக்கு நேர்ந்தது.

எதிரியின் சுவடியில் 6-வது பக்கத்தில்தான் "இனி விஷய நிரூபணம்செய்ய உபக்ரமிப்போம்" என்று தொடங்கியிருக்கிறது. அதற்குக் கீழ் ஸ்ரீஸூக்திகள்யாவும் சிசுபால திவ்யஸூக்திகளே யென்பது ஸ்பஷ்டம். மேலுள்ளவையும் அவையேயாம். நிற்க. (1) சேட்லூர் ஸ்வாமியின் பதிப்புகளெல்லாவற்றிலும் ப்ரும்மம்

ப்ரும்மசாரி, ப்ரும்மவித்யை என்கிற பதங்கள் பலகாலும் காணப் படுகின்றனவென்றும், இவற்றின் ஸம்ஸ்க்ருத ஸ்வரூபம் சேட்லூரார் புத்திக்குச் சிறிதும் எட்டாதது என்றும் தாண்டவகண்டனத்தில் எழுதப்பட்டுளது. அதற்கு இவர் எழுதியுள்ள ஸமாதானம்;— 'பாஷாந்தர பதங்களை எழுதும்பொழுது அவைகளின் உச்சரிப்பை அநுஸரித்தல்லவோ எழுதவேண்டும். ஒரு பதத்தையே பலவித மாக எழுதுவதுண்டு — இத்யாதி.—இது பிசகு. ஸம்ஸ்க்ருத பதத் தைத் தமிழில் எழுதும்போது ஸம்ஸ்க்ருத வர்ணக்ரமரீதியாக எழுதுவதோ, தமிழிலக்கணவிதிப்படி யெழுதுவதோ இரண்டத் தொன்றேயுள்ளது. சில வருஷங்களுக்குமுன் வேதாந்ததீபிகையில் எழுதல் முறைமை என்ற மகுடத்தின்கீழ் அடியேன் எழுதியுள்ள நீண்ட வியாஸத்தை வாசித்தால் இந்த மருமம் தெரியவரும். 'ப்ரஹ்ம' என்கிற ஸம்ஸ்க்ருத பதத்தை, உச்சரிக்கும் வகையில் சேட்லூரார் எழுதியிருக்கிறாராம். பதத்தின் சுத்தமான ஸ்வரூபத் தைத் தெரிந்துகொள்ளாத தாம் தவறாக உச்சரித்து வந்திருக்கிறார் என்பது இதனால் விளங்குமே யல்லது ஒருவழியிலும் ஸமாதானம் வந்ததாகாது. * அயாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா இத்யாதிகளான லக்ஷகோடி ஸ்தலங்களிலும் ('ப்ர') என்று உச்சரிப்பு உள்ளதே யன்றி (ப்ரு) என்ற உச்சரிப்பு அக்ஷராஸ்யன்வாயில் வராது. வந் தால், அது மமிட்டி, திருமட்டி, திருமாப்பிடி போன்ற உச்சரிப்பே யாகும். ப்ர - என்பதில் பகாரமும் ரேபமும் அகாரமும் உள்ளது. இதில் ரு எங்ஙனேவரும். தலைகீழாகத் தவம் செய் யினும் வராது. ப்ரஜ்ஞா என்னும் வடசொல்லை ப்ருஜ்ஞா என்று எழுதலாயானல் ப்ரஹ்மத்தை ப்ரும்மமாக்கலாம். இப்போது இவர் கண்டனமென்று வெளியிட்டிருக்கும் சிறு சுவடியிலும் ப்ரும்ம மென்றே மூன்றுவிசை யெழுதியுள்ளார். சிறுவனும் தெளியக் கூடிய இச் சிறு விஷயத்திலும் வீண்பிடிவாதத்தையே கொண்டு தவறுதலைத் திருத்திக்கொள்ள மாட்டாதவிவர் அந்தோ! பொறு நீயர். "உச்சரிப்பை யநுஸரித்தல்லவோ எழுதவேண்டும்" என்ற விவர் ப்ர என்னுமெழுத்தை எப்படி உச்சரிக்கிறாரென்பதை நான்கு அக்ஷராஸ்யர் முன்னிலையில்தான் கேட்டறியவேண்டும். அது ஸம்யுக்தாக்ஷரமென்பது இவர் நெஞ்சுக்கு இன்னமும் எட்ட வில்லை. பகாரத்தின்மேல் உகாரமென்றே மருண்டிருக்கிறார்.

இங்கே இவர் எழுதியிருக்கிற வாசகங்களைப்பாரீர்;—"ப்ரும்ம என்கிறபதத்தை பிரம, பிரஹ்ம, ப்ரஹ்ம, ப்ரம்ம, பிரம்ம இத்யாதியாக எழுதுவதுண்டு என்பதை நீர் அறியவில்லை" இத்யாதி. அந்தோ! இவருடைய மேதையின் மாட்சியை என்சொல்வோம்! "ப்ரும்ம என்கிறபதத்தை" என்று எழுதுகிறரே, அப்படி ஒரு பதம் எந்தபாஷையில் இருக்கிறதாக இவர் நினைத்திருக்கிறா? இந்த ஒரு விஷயத்தைமாத்திரமாவது இவர் ஸ்கூல்ஸில்நின்று சோதிவாய்திறந்து பேசிப்போவரா? இவருடைய ஷிரூஷாவலி யில் ஹோவுக்கு முன்னெழுத்து ஜோவாகவே யிருக்கத்தகுதி.

2. தேசிகனுடைய ஹஸ்திகிரி மாஹாத்மியப் பிரபந்தத்தில் * மெய்விரதநன்னிலத்து மேன்மையேத்தி என்றவிடத்து ஏத்தி என்றிருக்கவேண்டியதை ஏற்றி என்று 'சேட்லூரர்' எழுதினது அறியாமைஎன்று தாண்டவகண்டனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. 'ஸ்தோத்திரம் செய்து'என்று இவர் எழுதியிருக்கும்பொருள் ஏத்தி என்ற பதத்திற்கு ஏற்குமேதவிர, ஏற்றி என்றபதத்திற்கு ஒரு நாளும் ஏலாது. இதற்கு இவர் பதில் எழுதப்புகுந்து திருவாய் மொழியில் (4-5-1)"ஏற்ற நோற்றேற்கு" என்றவிடத்தும் (7-6-10) "ஏற்றரும் வைகுந்தத்தை" என்றவிடத்துமுள்ள வியாக்யான ஸூக்தியைத் தமக்கு அநுகூலமாக எடுத்துக்காட்டுகிறர். அந்யதா ஜ்ஞாநம் கொழுந்துவிட்டுப் படருகிறபடி மிகவு மற்புதம். ஏற்ற என்பதற்குப்பிள்ளான் [பாடுகைக்கு] என்று பொருள்பணித்திருப்பது உண்மையே. சொல்மாலைகள் நாவிலே ஏறும்படியாக (அல்லது) எம்பெருமான் திருவடிகளில் ஏறும்படியாக என்பது அவ்விடத்திற்கு உற்ற பொருள். ஆறுயிரப்படிமுழுதும் தாத்பரியபரமேயன்றிப் பதவுரைகூற வந்ததன்று. வடமொழியில் பதவுரைகூற வந்த ரங்கராமாநுஜஸ்வாமி "ஏற்ற-ஸஉவ-யித்ரூ" என்றெழுதியிருக்கிறரே, அதைக்கண்டு தெளியலாமே. 'பாடுகைக்கு' என்றது பதவுரைதான் - என்றே கொண்டாலும் இவர்க்கு என்னலாபம்? பாடுதலும் ஸ்தோத்ரஞ்செய்தலும் பரியாயமாகுமோ? இனி, ஏற்றரும் வைகுந்தத்தை என்றவிடத்து வாதிகேஸரி பணித்ததும் இவர்க்கு அநுகூலமன்று. ஏற்றரும் என்பதற்கு 'ஏற அருமையான' என்று சப்தார்த்தம். பாபிகளான நமக்கெல்லாம் ஏற முடியாதது என்றபடி. நமது நெஞ்சிலும் வாக்கிலும் ஏறமுடியாதது என்பதும் பொருளாகும். இப்பொருளை பட்டர் ஸ்ரீகுணரத்நகோஶத்

தில் ''யதோ வாசோ மநஸ:... யதோ வாசோ நிவர்த்தந்தே'' என்று காட்டியருளினர். இப்பொருளையே வாதிகேஸரி ''வாங்மநஸாபரிச் சேத்யமான'' என்ற உரையாற் காட்டினர். இதிலிருந்து 'ஸ்தோத்ரம் செய்து' என்கிற அர்த்தம் எப்படி இவர்க்குக் கிடைத்ததோ அறியோம். குறுந்துகை என்று ஒரு தமிழ் நூலைச் சொல்லி அதிலிருந்து ஒரு பிரயோகம் காட்டுகிறுர். ஐயோ! குறுந்துகை என்றொரு நூல் இன்றளவும் தமிழுலகத்தில் கண்டதில்லை. குறுந்தோகை என்பதே உள்ளது. ஐயோபாவம்! சேட்லூர் ஸ்வாமி வெகு ப்ரயாஸப்பட்டிருக்கிறு்ர். பலரிடத்திலும் சென்று திரிந்தலைந்திருக்கிறுர். புஸ்தகத்தின் பெயரைக்கூட உள்ளவாறு கிரஹிக்க மாட்டாதவிவர் அதற்குள்ளிருந்து விஷயங்காட்டப் புகுவது மிக்க ஸாஹஸம். குறுந்தொகையில் ஏற்றி என்ற பிரயோகமுள்ளது மெய்யே. அந்த ஓரிடத்தில்தானே? பலகோடி நூறுயிரவிடங்களிலுண்டு. இருந்தால் இவர்க்கென்ன? ஏற்றி என்பதற்கு 'ஸ்தோத்ரஞ் செய்து' என்று ஒரு புலவர் பொருள் எழுதியிருப்பதாக இவர் தமது ஆயுளுக்குள் எடுத்துக்காட்டிவிட்டால் போதும்.

அகராதியில், ஏற்றம்—புகழ். என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறதாம். இருக்கட்டுமே. புகழ் என்றுல் என்னவென்பதே இவர்க்குத் தெரியாது. அதையும் அந்த அகராதியைக்கொண்டே அறியலாமே. புகழாவது கீர்த்தி. ஸ்தோத்ரஞ் செய்வதென்பதும் கீர்த்தி யென்பதும் பரியாயமன்று. கீர்த்திகளை விஷயமாகக் கொண்டு ஸ்தோத்ரம் செய்வதன்றேவுள்ளது. ஏற்றல், ஏற்றுதல் என்ற சொற்களுக்குப் பொருள் விமர்சிக்கவேண்டுமேயன்றி ஏற்றம் என்றபதத்தைப்பற்றின விசாரம் அப்ரஸக்தம். மாற்றம் என்ற பதத்திற்கு உக்தியென்று பொருள். இதைக்கொண்டு மாற்றி என்றபதத்திற்கு, சொல்லி என்ற பொருள்கொள்ள முடியாதன்றே. அந்தோ! இந்த விசாரத்தைத் தமிழர் கண்டால் வயால் சிரிக்கமாட்டார்கள். ஒரு அந்யதாஜ்ஞாநத்தைப் பரிஹரித்துக்கொள்ளப்புகுந்தவிவர் இன்னமும் பல அந்யதாஜ்ஞாநங்களையே பிரசுரப்படுத்திக்கொண்டாராயிற்று. சுண்டப்பாளையத்துப் பதிப்பில் [தேசிகப் பிரபந்தத்தில்] ஏத்தி என்றில்லையாம். ஏற்றி என்றேயுள்ளதாம். அதில் ஒட்டிக்கொண்டிருந்த ஈயையும் எடுத்துக்கொள்ளாது விட்டிட்டாரே பாவம்!. பெங்களூர் தளகோட்

டம் தூப்புல் வெங்கடாசாரியர்பதிப்பில் கௌத்துவம் என வரு மிடங்களில் 'கௌஸ்துவம்' என்றும், மௌலி என வருமிடங்களில் 'மௌலி' என்றும் காண்கிறதே. அவற்றையும் ஆதரித்துக்கொள் ளாததென்னே? இதே ஹஸ்திகிரி மாஹாத்மியப் பிரபந்தத்தில் "பண்டைநான்மறை மௌலி (மௌலி) படிந்த நான்" என்று அவர் பதிப்பித்திருப்பதைக் காணலாமே. அதுவும் பிரமாணமாக விரைவில் வரும்போலும். *ஹாஹாவாஸுதேவநயநவாக்ஷி:

3. அச்சு ப்ரசுரங்களில் மிகவும் ஸஹஜமாக நேரிடக்கூடிய பிழைகளைக்கொண்டு தாண்டவ கண்டனத்தில் சில ஆர்ப்பாட்டம் பண்ணியிருப்பதாக எழுதுகிறார். சில என்று ஏன் எழுதுகிறார்? பல என்றே எழுதிவிடலாமே. தாண்டவ கண்டனத்தில் நிரூ பித்துள்ள 52 பிசகுகளையும் அச்சுக்கூடத்தார் தலையிலேயே சுமத் தித் தொலைக்கலாமே. நிற்க. விநயமாகவே இவரைக் கேட்போம்; 52 பிசகுகளில் எத்தனை பிசகுகளை அச்சுப்பிழையாக ஒதுக்க நினைக்கிறீர்? இதை மாத்திரம் பரம கிருபையுடன் தெரிவித்து விடுவீரானால் ஈதொப்பதெமக்கின்பமில்லை. "நன்முனிவரின்பம் தலைச் சிறைப்ப" என்றது அச்சுப்பிழை என்கிறீர். சிறைக்கவந் தோன்' என்று நேற்றுவரையில் ஓதிவந்ததும் அச்சுப்பிழை தானே? அல்லது ஹல்லுப் பிழையோ? அச்சுப்பிழையென்று கூறுமிடங்களில் நாம் வாயை மூடிக்கொள்வதுதான் தருமம்.

4. ஸங்கல்பஸூர்யோதயத்தில் "வஸிஷ்டஹீதவளஜ காலெஅதாநாஜீஷாம் நிதுஜஸ்துவாஜொவி" என்ற விடத் திற்கு இவர் மொழிபெயர்ப்பு எழுதியிருப்பது பரிஹாஸ்ய மென்று தாண்டவகண்டனத்திலுள்ளது. அதற்கு இப்போது இவர் என்ன ஸமாதானம் கூறுகிறாரென்பது சிறிதும் விளங்க வில்லை. "ஸங்கல்பஸூர்யோதய மொழிபெயர்ப்பில் சிலபாகம் அஸ்வாஸமானது என்று எடுத்துக்காட்டியிருப்பது உமக்கு ஸம்ஸ் க்ருத பாஷையில் ஜ்ஞானமில்லை யென்பதைக் காட்டுகிறது" என்று இப்போது இவரால் எழுதப்பட்டிருக்கிறது. இந்த அநுவாதமே மிகவும்வஞ்சகமானது.இவருடையமொழிபெயர்ப்புகளில் சிலபாகம் அஸ்வாஸம் என்று யார் எழுதியுள்ளார்? 'சிலபாகம்' என்பதும் பிசகு; 'அஸ்வரஸம்' என்பதும் பிசகு. தாண்டவகண்டனத்தில் (பக்கம் 5-ல்) "மூலத்தின் பொருளை விபரீதமாக்கவே காட்டுகிற

மும் இவரது மொழிபெயர்ப்பில் மிகமிகவே மிடைந்துளது'' என்று எழுதப்பட்டிருக்கின்றது. இதனால் இவருடைய மொழிபெயர்ப்பு கள் பெரும்பாலும் அஸம்பத்தம் என்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றதே யன்றி, 'சிலபாகம்' என்பதும் 'அஸ்வரஸம்' என்பதும் கிடையாது. அஸ்வரஸமென்பது சில உஹ்ஹோக்திகளுக்கு உரிய மரியாதைப் பேச்சு. அதை இவருடைய மொழிபெயர்ப்பு விஷயத்தில் எந்த ஜடன் உபயோகிப்பான்? இப்போது நான் கைதூக்கிச் சொல்லுகி றேன்—இவருடைய மொழிபெயர்ப்பில் அஸம்பத்தமே அதிகம். இவ்விஷயம் தாண்டவகண்டனத்தில் பல ஆதாரங்களுடன் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆண்பிள்ளையாயிருந்தால் அவை எல் லாவற்றையும் எடுத்துக்கொண்டு நியாயமான வழியில் மறுப்புரைக் கலாமே. அந்த வழியில் இவர் எப்படி காலை வைக்கமுடியும்? விஷயத்திற்கு வசவுதானே பதில். வாதியின் உக்தியை அநுவதிப் பதே இவர்க்கு வஞ்சகவழியில் அமைந்திருக்கிறதே. "சேட்லூர ருடைய மொழிபெயர்ப்பு முதலியவற்றில் பண்டிதர்களுக்காவது பாமரர்களுக்காவது உபகாரகமான அம்சம் அணுமாத்திரமுமில்லை யென்பதை விவேகிகள் பலரும் நன்கு அறிந்தேயுள்ளார்கள். இவ ருடைய ஒவ்வொரு நூலையும் எடுத்துக்கொண்டு ஒவ்வொரு வரியி லும் ஒவ்வொரு பதத்திலும் ஒவ்வொரு அக்ஷரத்திலும் உள்ள அவத்யங்களை (அல்லது அஸாரத்தன்மையை) நான் எந்தஸதஸ்ஸி லும் நிரூபிக்க முன்வருவேன்; அதில் சிறிதும் கூச்சமுடையே னல்லேன்'' என்று தாண்டவகண்டனத் தொடக்கத்திலேயே பன்னிப்பன்னி எழுதி இருக்கச்செய்தேயும், இப்பெரியார் தமது மொழிபெயர்ப்பில் சிலபாகமே அஸ்வரஸமாயிருப்பதாகப் பிறர் சொல்வதுபோல் எழுதிக்கொண்டாரே, இது என்ன தைரியம்? ஆர்கண்ணில் மண்ணைத்தூவ? "சேட்லூராருடைய மொழிபெயர்ப் புகள் முக்காலேமூன்றுவீசம்பாகம் போக்யமாகவேயிருக்கிறது; வீசம்பாகமே அஸ்வாஸமாயிருக்கிறது'' என்று தாண்டவகண்ட னக்காரர் சொல்லுவதாகப் பிறர் பாவிக்கட்டும், என்கிற கள்ள நினைவே இவரை இப்படி எழுதுவித்தது. இப்படிக்கு இவர் கனவு காணவும் முடியாது. பிரக்ருதவிஷயத்தை எடுத்துக்கொள்ளு வோம். ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் "வரி஗்ரஹீதவளனா காலெவதாநாஶிஷாம்'' என்ற வாக்யத்திற்கு இவர் என்ன அர்த்த மெழுதியிருக்கிறாரென்றால், (அதை அநுவதிக்கவும் வெட்க

மாயிருக்கிறது.) "பௌண்ட்ரக வாசுதேவன்போன்ற அத்வைதிக ளான இவர்களால் பரிக்ரஹிக்கப்பட்ட" என்று எழுதியிருக்கிறார். ஸாமாந்ய காவ்யஜ்ஞானமுடையவன்கூட இப்படி எழுதமாட்டான். அத்வைத பதத்திற்கு விசேஷணமாக ஸ்வாமி ப்ரயோகித்திருக்கிற வரிக்ருஹீதவஷத்தை இவர் எதற்கு விசேஷணமாக்கி உரைத் திருக்கிறாரென்று பாருங்கள். அமீஷாடி என்றதற்கு அர்த்தமான குத்ருஷ்டிகளால் பௌண்ட்ரக வாஸுதேவனோடு அத்வைதம்-[ஒற்றுமை] ப்ரிக்ரஹிக்கப்பட்டதாக ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்துள்ளாரேயல்லது நித்யமுக்தவாதம் பரிக்ரஹிக்கப்பட்ட தாக அருளிச்செய்திருக்கவில்லை. இப்படிப்பட்டதான அந்வய க்ரமத்தை ஒரு அக்ஷராஸ்யனும் வேறுபடுத்த முடியாது. மேற் குறித்த வாக்கியத்திற்கு ஸர்வாத்மநா அஸங்கதமான அர்த்தத் தை இவர் எழுதிவைத்ததுமல்லாமல் இப்போது பிரபலமாக உறு முகிறார். ஐயோ! இவருடைய ஞானவிஷயத்தில் சோகித்து மாள வில்லையே. இவர் இப்போது எழுதியிருக்கிற திரஸ்கார வாக்கியங் களைப் பாருங்கள்;—"ஸமஸ்த பதத்திலுள்ள வரிக்ருஹீத என் னும் பதத்தை வெட்டிவிடவேண்டுமாம்; அத்தை மேலுள்ள அமீஷாமித்யாதியுடன் ஒட்டி அர்த்தம் சொல்லவேண்டுமாம்! இத் தால் இப்படிப்பட்ட ஜ்ஞானத்தை உமக்கு உண்டாக்கின உம்மு டைய ஆசார்யனுடைய பாண்டித்யம் நன்கு வெளியிடப்பட்டது" என்று பரிஹஸித்தெழுதியுள்ளார். 'நிஜஊவஷொஷம் நிஊ ஜெஷவி ஓவபுணொஷு வஊவபுயஷி,' என்று தேசிகன் ஸாதித்த ரீதியிலே, இவர் செய்திருக்கிற அபார்த்தலேவநத்தில் விவேகிகள் விளக்கவேண்டிய தூஷண பரிஹாஸங்களை இவர் பிறர் மீது ஏறிட்டது மிக்க துணிவு.

ஆரியர்காள்! இந்தச் சேட்லூர்மஹாநுபாவர்க்கு ஸம்ஸ்கிரு தத்திலோ தமிழிலோ ஒன்றிலும் அணுவளவும் ஆழங்கால் கிடை யாதென்பதை அடியேன் சேஷாவதாரச்சிறப்பு, ஸ்தோத்ரவியாக்கி யான சோதனம் முதலியவற்றில் பல விஷயங்களை விவரித்துக் காட்டி விளக்கியிருக்கின்றேன். அவையெல்லாம் வெகுதூரத்தில் கிடக்கட்டும். இந்த ஒருவிஷயத்தில் இவர்பிடித்தபிடி ஸாதித்து விடுவாராகில் அன்றே தாஸாநுதாஸனாக நிற்கக் கடவேன். இது ஸத்யம். பின்வாங்காமல் பேச வருவாரா?

இங்கு இவருடைய வாதங்களை வித்வான்கள் கவனிக்கவேண்டும். "அத்வைதபதத்திற்கு ஒற்றுமை என்கிற அர்த்தம் யாரிடமிருந்து கேட்டறிந்தீர்? த்வைதமென்றால் பேதம்; அத்வைதமென்றால் அபேதம்—ஐக்யம்என்று அர்த்தமாகுமேயொழிய ஒற்றுமை (ஸாத்ருச்யம்) என்னுமர்த்தத்தை அந்தப்பதம் ஒருபொழுதும் சொல்லாது" என்று வெருகம்பீரமாகக் கண்டனமெழுதியுள்ளார். ஐயையோ! விபரீதஜ்ஞானவெள்ளம் கங்குகரையில்லாமல் பெருகிச்செல்லுகின்றதே!. ஒற்றுமை என்னும் தமிழ்ப்பதம் உலகமறிந்தது. இஃது, ஒன்று என்கிற பதமடியாகப்பிறந்த பண்புப்பெயர். இதற்கு ஐக்யம்என்கிற அர்த்தந்தவிர வேறுகிடையாது. திருவாய்மொழி என்று ஒரு திவ்யப்ரபந்தம் இவரும் கேள்விப்பட்டிருக்கலாமே. அதில் (7-7-10) "ஒற்றுமைக்கொண்டதுள்ளம்" எனவருகிறது. அங்கு ஒற்றுமை யென்றதற்கு ஸகல வ்யாக்யாதாக்களும் என்ன அர்த்தம் பணித்திருக்கிறார்கள்? என்ன அர்த்தம் பொருந்தும்? என்பதை இவர் ஆராயவல்லவரோ? ஒப்புமை என்ற வேறொருபதத்தையும் 'ஒற்றுமை' என்ற பதத்தையும் இவர் ஒன்றாக மயங்கிவிட்டார், ஒப்புமையென்பதற்கே ஸாத்ருச்யம் அர்த்தம். ஒற்றுமையென்பதற்கு ஐக்கியமென்கிற பொருள்தவிர ஸாத்ருச்யமென்கிற பொருள் கிடையவே கிடையாது. ஆகவே அத்வைதமென்றபதத்திற்கு மிகவும் இணங்கிய அர்த்தமே தாண்டவகண்டனத்தில்நிரூபிக்கப்பட்டுளது. அதை இவர் தூஷிக்கவும் பரிஹஸிக்கவும் சிறிதேனும் இடமுண்டோ? அத்வைதபதத்திற்கு ஸாத்ருச்யம் அர்த்தமன்று என்று எழுதுகிறவிவர் யாரைக்கண்டிக்கிறார் தெரியுமோ? தம்மையே தாம் கண்டித்துக்கொண்டாரத்தனை. எங்ஙனேயென்னில்; இந்தச் சேட்லூரார் தாம் ஸங்கல்ப ஸூர்யோதயமொழிபெயர்ப்பில் "பௌண்ட்ரகவாசுதேவன்போன்ற அத்வைதிகளான இவர்களால் பரிக்ரஹிக்கப்பட்ட" என்று பொருள் எழுதியிருக்கிறார். இதில், போன்ற என்பது எந்தபதத்தினுடைய அர்த்தமென்று விமர்சியுங்கள். மூலத்தில் ஸாத்ருச்யபோதகமான பதம் ஏதேனு முண்டோ என்று பாருங்கள். அடியோடு கிடையாது. 'பௌண்ட்ரகவாஸுதேவனோடு சுஹிருர்களான' என்று எழுதித் தீரவேண்டும். இவ்வர்த்தமே தாண்டவகண்டனத்தில் காட்டியுள்ளது. மிகவும் தவறான அந்வயத்தையும் அர்த்தத்தையும் தாம் எழுதிவிட்டு, நல்வழி காட்

டினூர்மீது எரிந்துவிழுவது இந்த மஹானுக்கே தகும். "வஸூதி வஶேஷு தொஷாநு ஸுஸதோவி, ஸதோவி நைவ ஶுணாநு | விவரீதவிஶம்ஸூஹிநு உஹிஶா ஜொஹா ஜநவெஸூஷ:||" என்கிற ஸ்வாமி ஸூக்தி இவரொருவரையேநோக்கி அவதரித்ததுகாணும். தம்முடைய ஹ்ருதத்தையே தாம் வெளியிட்டுக்கொண்டாராயிற்று; ஸுவெதாநாமென்பதற்குஅத்வைதிகளென்று முன்பு அர்த்தமெழுதியுள்ள இவர் அதை ஏன் ஸமர்த்திக்கப்புகவில்லை?

விவேகிகாள்! சேட்லூர் ஸ்வாமி வெளியிடுவித்த ப்ரலாப கண்டன நூலில் (பக்கம் 9-ல்) அடியேன் பெயரை ப்ரஸங்கித்து "அவருக்கு ஜ்ஞானம் என்பது ஈஷத்துமில்லை" என்று தொடங்கி, திருக்குடந்தையில் வெளியிட்ட வொரு நூலை யெடுத்துக்காட்டித் தலைகால் தெரியாமல் சில உருக்திகள் எழுதப்பட்டிருக்கின்றன. * கும்பகோண பிசாசோச்சாடந மந்த்ரமஹோததியின் முதல் தரங்கத்திலே முழுகி முடிந்துபோனாருடைய கதைகளை யெடுத்துப் பேசுவதனால் இவர்க்கு யாது பயன்? * ஸுகாரூரீநி நாஶாநி தூவஸம் ஸஂஜநயந்தி ச என்றிருப்பாருடைய பரிதாபங்களை இவர் எதுக்குக் கிளப்புகிறார். * பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகட்குத் துணையான புஸ்தகங்களை இவர் எடுத்துக்காட்டுவது என்னோ? திருக்குடந்தையாருடைய கோலாஹலமெல்லாம் எங்தெந்த க்ரந்தங்களினால் எவ்விதமாகி எந்த நிலைமையில் இருக்கின்றதென்பது வெஹிவெஷெஸிகளுக்குத் தெரிய வழியேது?

அடியேன் பெரிய பண்டிதனென்று ஆர்ப்பாட்டம் பண்ணிக்கொண்டிருந்ததாகவும், வாதத்திற்கு அழைப்புக் கடிதம் வந்ததும் ஓட்டம் பிடித்ததாகவும் எழுதுகிறார். இப்படியும் ஒரு அஸம்பாவிதத்தை எழுதி வெளியிட்டுவைத்தால் ஏதேனுமொரு குக்ராமத்தில் எதாவது ஒரு மூலையில் எவனாவது ஒருவன் இதை நம்பிக் கிடக்கட்டுமே என்கிற எண்ணத்தினால் இவர் இப்படி யெழுதி வைத்தார்போலும். இப்படிப்பட்ட அஸம்பத்தங்களை இவர் எவ்வளவு எழுதினாலும் அடியேனுக்கு யாதொரு ஹாநியும் வருத்தமுமில்லை. எங்தெந்த மஹாநுபாவர்கள் அடியேனை வாதத்திற்கு அழைத்தார்களோ, என்னென்ன கோலாஹலங்கள் செய்தார்களோ, எவ்விதமான பர்யவஸாநத்தைப் பெற்றார்களோ எல்லாம் நாளைவரையில் க்ரந்தமூலமாய் நாடு நகரமும் நன்கறிந்தவையே. இதைப்பற்றி அடியேன் இங்கு அபூர்வமாக யாதொன்றும் எழுதிக்

கொள்ளவேண்டிய அவசியமில்லையென்பது அடியேனுடைய வெளியீடுகளையெல்லாம் வாசித்தவர்களுக்கு நன்கு தெரியும்.

இதற்குமேல், பிரதிபக்ஷியின் சுவடியில் (பக்கம் 10-ல்) "ஸ்ரீ தேவப்பெருமாள் மங்களாசாஸநம்" என்ற மகுடமிட்டு எழுதியுள்ள அபத்த புராணங்களுக்கு உத்தரம் எழுத வேண்டியதும் அநாவச்யகமாகவேயுள்ளது. சேட்லூர் தாண்டவகண்டனத்தில் 11ஆவது பக்கம் முதல் 30-வது பக்கம் வரையில் 20 பக்கங்களில் பலவகை ப்ரமாணோபபத்தியுக்திகளுடன் விரிவாக எழுதப்பட்டுள்ள விஷயங்களில் ஒன்றையும் இவர் க்ரஹித்தாரல்லர். "பேரருளாளன் மங்களாசாஸந விஷயமாய் இருபது பக்கம் எத்தையோ எழுதியிருக்கிறீரேயன்றி ப்ரக்ருதமான விசாரத்திற்கு அதில் ஒரு அம்ஸமாவது அநுகுணமாயில்லை" என்று வெகு துணிவுடன் எழுதிவிட்டார். பிரகிருதத்திற்கு உபயோகப்படாத விஷயங்களையெழுதி நிரப்புகிற வழக்கம் இவர்க்கே யுள்ளது. "ஆத்மவத் ஸர்வபூதாநி யஃபஸ்யதி ஸபஸ்யதி" என்கிற ரீதியிலே இவர் தம்மைப்போலவே பிறரையும் பாவிக்கக் கடமைப்பட்டவரே. அது நிற்க. இவ்விடத்தில் முக்கிய விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லி முடிக்கின்றேன். அருளிச்செயல் வியாக்கியானங்களிலே "திருவத்தியூரிலே நிற்கிறவன்" என்றுள்ள ஸ்ரீஸூக்திகள் நின்ற திருக்கோலமான பேரருளாளனையன்றி, வீற்றிருந்த திருக்கோலமான அழகிய சிங்கரை ஸ்பர்சிக்கவும்மாட்டா என்று தாண்டவகண்டனத்தில் நிரூபிக்கப்பட்டுளது. அதன்மேல் இவர் கொடுக்கிற தூஷணமாவது— நிற்கிறவன் என்பதற்கு ஸ்திரப்ரதிஷ்டிதன் என்று அர்த்தம் பொருந்துமாகையினால்........இத்யாதி. "திருமொழி 7-5-1ம் பாட்டில் வீற்றிருந்த திருக்கோலத்துடன் கூடிய ஸ்ரீபரமபதநாதன் விஷயமான 'மருவிநின்ற' என்பதற்கு 'நித்யவாஸம்பண்ணுகிற' என்றிறே வ்யாக்யானம் செய்யப்பட்டது" என்றும் எழுதியுள்ளார்.

ஸ்ரீவ்யாக்யாதாக்களுக்கும் சேட்லூர் ஸ்வாமிக்கும் நூறுயிரம் யோஜனை தூரமுண்டென்று ஏற்கனவே நிலைநாட்டப்பட்டிருப்பதற்கு இப்போது இவர் தாமே சிலாசாஸனம் நாட்டுகிறார் காண்மின். பெரிய திருமொழி (7-5-1) "தந்தைகாலில் பெருவிலங்கு தாளவிழ, நள்ளிருட்கண் வந்த வெந்தை பெருமானார் மருவிநின்றவூர்போலும்" என்றிருப்பதை இவர் உதாஹரித்துக்

176650

காட்டி என்னவோ எழுதுகிருர், இதற்கெல்லாம் அங்கு ஏதாகிலும் சிறிதேனும் விஷயமுண்டா என்று பாருங்கள். இது தேரழுந்தூர் விஷயமான பாசுரம். அவ்வூர்ப் பெருமாள் நின்ற திருக்கோலமாகவே ஸேவை ஸாதிப்பவர். "அணியழுந்தூர் நின்றுகந்த" என்று திருநெடுந்தாண்டகத்திலருளிச்செய்தது போலவே திருமொழியிலும் உள்ளது. அது பரமபதநாதன் விஷயமென்கிருர். மூலத்திலோ வியாக்கியானத்திலோ இவ்வகைக்குரிய சொல் லேஷத்தும் இல்லாமலிருக்கவும் ஏதுக்கு இவர் இப்படியெழுதுகிருர். 'வஸுதேவபுத்திரனுகத் திருவவதரித்த பெருமான்வந்து நிற்கிறவிடம் திருவழுந்தூர்' என்று தானே இப்பாசுரத்தில் அருளிச்செய்திருப்பது. ஒன்றையும் பாராமல் ஆராயாமல் கையும் மனமும் போகிற போக்கெல்லாம் எழுதுபவர் இன்னுரென்பதை இந்த ஒரு விஷயங்கொண்டே விவேகிகள் உணரலாம்.

"நூற்றெட்டுத்திருப்பதிகளில் எந்த இடத்திலாவது திவ்ய தேசத்தைச் சொல்லாமல் மங்களாசாஸனம் செய்யப்பட்டிருக்கிறதா?" என்று கேட்கிருர். இந்தக் கேள்விக்கு என்ன ப்ரஸக்தி? நம்பேரருளாளனுடைய திவ்யதேசத்தின் பெயர் ஆழ்வார்கள் திருவாக்கில் நுழைந்து புறப்படாமலிருந்தாலன்ருே இவர் இந்தக் கேள்வி கேட்கவேண்டும். அத்தியூர், கச்சி என்ற திருநாமங்கள் எந்த திவ்யதேசத்தைச் சொல்லுகின்றனவென்று இவர்தாம் நினைத்திருக்கிருரோ அறியோம். அத்தியூர்என்ற சொல் ஹஸ்திகிரியைச் சொல்வதென்பதை இவரே இசைந்துளர். காஞ்சீ என்னும் வடசொல் கச்சி என்ருயிற்று என்பது நிர்விவாதம். "க இதி ப்ரஹ்மணோ நாம தேந தத்ராஞ்சிதோ ஹரி: | தஸ்மாத் காஞ்சீதி விக்யாதா புரீ புண்யவிவர்த்தநீ" என்று ஹஸ்திகிரிமாஹாத்மியத்தில் நிர்வசநம்செய்யப்பட்டது. இது ஸ்வாமிதேசிகனுலும் உபாத்தமானது. நான்முகன் வேள்விசெய்து ஆராதித்தது பேரருளாளனையே என்பது புராணத்தினுலும் தேசிகப்ரபந்தத்தினுலும் ஸ்பஷ்டமாக விளங்கும்போது, தந்நிபந்தநதயைவப்ரவ்ருத்தமான கச்சியென்னும் பெயர் பேரருளாளனது திருப்பதியையன்றி வேறு எந்தவூரைக்காட்டும். ஆழ்வார்கள் திருவாக்கில் பெரும்பாலும் திவ்யதேசந்தான் நுழைந்து புறப்படுகிற வழக்கம். சில விடங்களில்தான் எம்பெருமான்களுடைய அஸா

தாரணத் திருநாமத்தையும் பாடுவது. இவ்விரண்டுவிதமான வாய்ப்பும் கச்சிப்பதிக்கு உள்ளது. திவ்யதேசத்தெம்பெருமான்களை நோக்கிய * கள்வா! * பவளவண்ணா! என்கிற விளிகளில் ஸௌசீல்ய ஸௌலப்யமே இல்லை யென்பதை இவர் இந்தஜன்மத்தில் அறியமுடியாது.

இங்கே விவேகிகள் முக்கியமாக நோக்கவேண்டியவிஷயம் ஒன்றே பேரருளாளன், அருளாளப்பெருமாள், வரந்தரும் பெருமாள் என்றிங்ஙனே ப்ரஸித்தரான நம் வரதனை ஆழ்வார்கள் போற்றியிருக்கிறார்களென்பது தாண்டவகண்டனத்தில் ஸுஸ்பஷ்டமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அந்தவிஷயங்களை அவகாஹித்துக்கொள்வதற்கும் இவர்க்கு ஶக்தி லவலேசமுமில்லை யென்பது இப்போது இவர் வெளியிட்டிருக்கிற சுவடியினாலும் விசதமாய் விட்டது. இவருடைய துராக்ரஹத்தின்படியே பேரருளாளனுக்கு ஆழ்வார்பாடலில்லையென்றே வைத்துக்கொள்வோம் என்று தார்ஷ்ட்யதார்ட்யமாக இசைந்து தாண்டவகண்டனத்தில் (பக்கம் 17ல்) இந்த மஹாமேதாவியின்மேல் செய்திருக்கிற ப்ரத்யவஸ்தாநத்திற்கு இவர் பதில்சொல்லித் தீரவேண்டுமே. அதற்கு என்ன சொன்னார்.

இவர் தமது ஹஸ்திகிரி மாஹாத்மிய வியாக்கியானமென்னும் அபத்தச் சுவடியில் தொடங்கும்போதே, திவ்யதேசங்களென்றும் திவ்யதேசமல்லாத க்ஷேத்திரங்களென்றும் இரண்டு விபாகமிட்டு, திருக்கோவலூர் ஸ்ரீரங்கம் திருவஹீந்திரபுரம், திருக்குடந்தை என்கிற நான்கு தலங்களை ஒருவகுப்பாக எழுதி, [அதாவது — திவ்யதேசங்களென்ற வகுப்பில் எழுதி] அதற்குமேல், திவ்யதேசங்களல்லாத வெறும் க்ஷேத்திரங்களென்ற வகுப்பில் "காஞ்சீபுரம் மதுராந்தகம்" என்று பரிகணித்துள்ளார். ஆழ்வார் வாக்கில் நுழைந்து புறப்படும் க்ஷேத்திரங்கள் தான் திவ்யதேசம் என்று திவ்யதேச லக்ஷணமும் கூறிவிட்டு, அத்தியூர், கச்சி என்ற தலப்பெயர்கள் ஆழ்வார்கள் திருவாக்கில் நுழைந்தவைதான் என்பதையும் தாமே யெழுதிவிட்டு, திவ்யதேசமல்லாத மதுராந்தகத்தோடு காஞ்சியையும் பிணைத்து எங்ஙனே எழுதினீர்என்று தாண்டவகண்டனத்தில் கேட்டிருப்பதற்கு இவர் என்ன உத்தரம் உரைக்கிறார்? இவருடைய சுவடியில் இவர் எடுத்துக்கொண்ட விஷயம் எது? எதன்மேல் கண்டனம் அவதரித்தது? எதை இவர் ஸமர்த்தித்துக் கொள்ளக் கடமைப்பட்டவர்? இவற்றை இவர் சிறிதும் ஆராயாமல் அடி தொடங்கி முடிவரையில், "குளறுகிறீரே, உளறுகிறீரே"

என்றிப்படிப்பட்ட பாமர பாஷிதங்களை நிறைத்து நானும் பதில் வெளியிட்டுவிட்டேனென்று வீதியில் உலாவத் தொடங்கிவிட்டால் ஸாராஸாரங்களை விவேகிக்க வித்வான்கள் இல்லையா?

காஞ்சீபுரம் திவ்யதேசமல்லாத க்ஷேத்திரம், என்று இவர் எழுதியிருக்கிற சுவடி இன்னம் முழுதும் நீறுகிவிடவில்லையே. அப்படி எழுதியிருக்கின்றவர் இப்போது (பக்கம் 20-ல்) "ஸ்ரீ ஹஸ்திகிரிக்கு திவ்யதேசத்வம் இல்லையென்று ஓரிடத்திலும் நிரூபிக்கவில்லை" என்று கைகூசாது எழுதுகின்றார். இதைத் தம் நாக்கினால் வெளியிட்டுக்கொள்ள வெள்கியே வேற்றுப் பெயரால் வெளியிட்டுக்கொண்டார். முன்பு தவறாக எழுதிவிட்டோமென்று இவர் நெஞ்சு அநுதபிக்கின்றமை இதனால் விளங்கவில்லையா? காஞ்சீம் வீக்ஷ்ய ஹஸந்து நிர்ஜரஸஹஸ்ராண்யநேகஸ்ய தே ஐதிஹ்ய ப்ரவஹம் ப்ருவீத பவ்யம் க்ருபா வாஸ்தவ்யதா || இவருடைய ஹஸ்திகிரி மாஹாத்மிய வுரையில் அப்ரஸக்த விஷய விசாரமே மிஞ்சு வுள்ளதென்று தாண்டவகண்டனத்தில் எழுதப்பட்டிருந்ததற்கு "அப்ரஸக்தமென்பதே அப்ரஸக்தம்" என்று இவர் இலேசாகக் கண்டனமெழுதிவிட்டார். படித்தவன் எழுதுகிற எழுத்தா இது? 'திவ்யதேசங்கள்....திவ்யதேசங்களல்லாத க்ஷேத்திரங்கள்' என்று இரண்டுவகையிட்டு நீட்டியிருக்கிறாரே இவர்; இந்த விபாகத்திற்கு ஹஸ்திகிரி மாஹாத்மிய வுரையில் என்ன ப்ரஸக்தியென்று அடியேன் கைகூப்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்; பரமகிருபையுடன் ஜ்ஞானவான் உத்தரம் உரைப்பாரா? இவர் ஏதேனும் மதுராந்தக ப்ரபந்தத்திற்கோ மன்னார்குடி ப்ரபந்தத்திற்கோ உரை யெழுதப் புகுந்தாரோ? அது இல்லையே. திவ்யதேசந்தானென்று இப்போது இவரே ஒப்புக்கொள்ளும்படி நேர்ந்த ஹஸ்திகிரியைப்பற்றின பிரபந்தத்திற்குத்தானே உரை யெழுதப் புகுந்தார். அதில் திவ்யதேச ததிதரவிபாகம் பண்ணினது ஸ்வதந்த்ரஸ்வாதந்த்ர்யமன்றோ? இங்ஙனே இவர் தம்முடைய சரக்கெல்லாம் சொத்தலும் புழுத்தலுமாயிருக்க, சிறிதும் நாணமும் அச்சமுமின்றிப் பிறரைப்பழிக்கவும் பரிஹஸிக்கவும் புகுந்தது என்ன பேதைமை! யாரென நினைத்து வாயினை வீசினீர்?

இனி, தேவப் பெருமாளுக்கு ஆழ்வார் மங்களாசாஸனமில்லையென்று முன்பு நிஷ்கர்ஷம் செய்திருப்பதே பொருத்தமானது என்று கொண்டு இப்போது இவர் எழுதியுள்ள விஷயங்களையும் சிறிது விமர்

சிப்போம். பூர்வாசார்யர்களுடையவும் ஆசார்ய ஸார்வபௌமனுடையவும் ஸ்ரீஸூக்திகளை அநுஸரித்துத் தாம் எழுதியிருப்பதாக மீண்டும் எழுதுகிறார். எந்த பூர்வாசார்யர் எந்த ஆசார்யஸார்வ பௌமர் எந்த க்ரந்தத்தில் அப்படி நிஷ்கர்ஷம் செய்திருக்கிறார் என்று தாண்டவகண்டனத்திலேயே வினவியிருக்கிறது. அதற்கு ஒரு பதிலுமில்லாமல் தம் பாட்டையே பாடிக்கொண்டிருக்கிற இவரை எந்த கோஷ்டியில் சேர்ப்பது? எல்லா ஆசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளாலும் தேவப்பெருமாளுக்கு ஆழ்வார் மங்களாசாஸனமே ஸ்தாபிக்கப்பட்டிருக்குமாற்றை விளக்கிக்காட்டியுள்ள தாண்டவகண்டனத்திற்கு இவரோ பதில் சொல்லவல்லவர்?

இப்போது இவர் எழுதியிருக்கிற பதில் பாமரனும் எழுதத்தகாதது. பாருங்கள்—; அத்தியூரான் புள்ளையூர்வான் என்ற பூதத்தாழ்வார் பாசுரம் அடிவாரத்திலுள்ள நரஸிம்ஹன் விஷயமென்பது அதன்முன் பாசுரத்தில் நரஸிம்ஹனுடைய ப்ரஸ்தாவமிருப்பதனால் விளங்குகின்றது என்று எழுதுகிறார். திருவயிந்திரபுரப்பதிகத்தில் முதற்பாட்டில் இருந்தண்மாநிலமேனமதாய் என்று வராஹமூர்த்தியின் துதியிருப்பதால் ஆழ்வார் வராஹப்பெருமாளைப்பாடினாரே யல்லது அந்தப்பாசுரத்தினால் தெய்வநாயகனைப்பாடவில்லையென்று ஒருவர் சொன்னால் இவர் என்ன மறுமொழி சொல்வாரோ? விபவாவதார சேஷ்டிதங்கள் பலவற்றைபுங்கொண்டுதானே ஆழ்வார்கள் அர்ச்சாவதாரபகவான்களை அநுபவித்துப்பேசுகிறார்கள். அருளிச்செயலில் ஆழ இழிந்தார்க்கன்றோ இது தெரியும். மேலெழப் பார்த்தாலும் தெரியுமே.

பெரியதிருமொழியில் பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்தில் வரந்தரு மாமணிவண்ணனிடம் என்றிருந்தாலும் பரமேச்சுரவிண்ணகர எம்பெருமானுக்கு அருளாளப்பெருமாள், வரதன் என்கிற ஒரு புதிய திருநாமம் ஏற்படுமேயன்றி அந்த மங்களாசாஸனம் தேவப்பெருமாளுக்கென்பது ஒருநாளும் ஸித்திக்காது—என்றெழுதுகிறார். இது திவ்யப்ரபந்தத்தில் பரிசயலேசமு மில்லை யிவர்க்கு என்பதையே வற்புறுத்தும். "கரம்பனூருத்தமனைக் கண்டது தென்னரங்கத்தே" "நாவாயுளானை நறையூரில்கண்டேனே" இத்யாதியான பாசுரங்கள் ஆயிரக்கணக்காக வுள்ளன. "தக்கானைக் கடிகைத்தடங்குன்றின் மிசையிருந்த அக்காரக்கனியை அடைந்துய்ந்துபோனேனே" என்று, சோளஸிம்ஹபுரத்தில் ஸேவைஸாதிக்கின்ற தக்கானைத் திருக்கண்ணபுரத்தில் ஸேவிப்பதாகத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்கிறார்.

திருக்கண்ணபுரம் ஸௌரிராஜனுக்கே தக்கானென்று திருநாமமென்று இனி இவர் சொல்லித்தீரவேண்டும். ஒருஸந்நிதியிலே உள்ள எம்பெருமானை மற்றோர் ஸந்நிதியிலே அநுபவிப்பது ஆழ்வார்களுடைய பாசுரங்களில் பெரும்பான்மையாகக் கண்டதாகும். அந்தரீதியிலே பரமேச்சுரவிண்ணகரத்தில் பேரருளாளனைச் சிந்தித்தாரென்றால் இதில் இவருடைய குத்ஸிததுர்வாதங்களுக்கு என்ன இடமிருக்கிறது ?

மேலும் வரந்தருமாமணிவண்ணனிடம் என்பது கச்சிக்கும் அடைமொழியாக இருக்கிறது [பரமேச்சுரவிண்ணகரத்திற்கே அடைமொழியாக அக்வயித்தாலும் குறையில்லை.] வரதராஜன் எழுந்தருளியிருக்கிற காஞ்சீநகரத்திலுள்ளது பரமேச்சுரவிண்ணகரம் என்று அந்தப் பாசுரத்தினால் சொல்லப்பட்டதாகிறது. இதனால் வைகுண்ட பெருமாளுக்கே வரதராஜனென்கிற திருநாமத்தை இவர் எங்ஙனே ஸாதிக்கவல்லார்? வாய் இருக்கிறதென்று எதையும் சொல்லி விடுவதோ? கை இருக்கிறதென்று எதையும் எழுதிவிடுவதோ ?

சேட்லூரருடைய ஹேவசனத்தில் "பூர்வாசார்யர்கள் நிரூபித்தார்கள்" என்று பலகாலும் காண்கிறது. இப்படிப்பட்ட வார்த்தைகளில் யாரேனும் விதவைகள் மயங்கலாமேயன்றி விவேகியொருவனும்மயங்கான். எந்த பூர்வாசார்யர் எந்த கிரந்தத்தில் என்ன நிரூபித்தாரென்பதைப்பற்றி இவர் ஒரு வரியாவது எழுதினரோ? தாண்டவகண்டனத்தில் வரிதோறும் பிரமாண ராசிகளை நிறைத்தே ஒவ்வொரு விஷயமும் மூதலிக்கப்பட்டுளது. அப்படிப்பட்ட க்ரந்தத்தை தூஷிக்கப்புகுந்தவிவர் தகுந்த பிரமாணங்களைக்காட்டியன்றோ ஒவ்வொன்றும் எழுதவேண்டும். சென்னை பட்டாபிராம முதலியார், திருவல்லிக்கேணி, சே கிருஷ்ணமாசாரியர் என்கிற இருவர் வெளியிட்ட நூற்றெட்டுத் திருப்பதி விஷயமான நூற்களில் அழகிய சிங்கரை அத்திகிரி நாதராக எழுதியிருக்கிறதாம். இதையே இவர் பிடித்துக் கொண்டு, 'பூர்வாசார்யர், பூர்வாசார்யர்' என்று வரிதோறும் எழுதுகிறார். மேற்குறித்த இரண்டு நபர்களே இவர்க்குப் பூருவாசாரியர் போலும். அரிசமய தீபம் என்று ஒருநூல் இருப்பதாகவும் அதில் ஏதோ எழுதியிருப்பதாகவும் வரைகின்றார். இப்படிப்பட்ட அநாமதேய ப்ரலபிதங்களை இவர் உதாஹரிக்கலாமேயன்றி உபயஸம்பிரதாயத்திலும் தேசிகன் வரையிலும் மணவாளமாமுனிகள் வரையிலுமுள்ள ஆசாரியர்களில் ஒருவருடைய ஸ்ரீஸூக்தியையேனும் இவர் உதாஹரிக்கவல்லவரல்லர் என்பது ஸுஸ்பஷ்டம். தவறிப்போய்

அப்படி ஏதாவது ஒன்றிரண்டு ஸ்ரீஸூக்திகளை இவர் காட்டியிருந்தால் அது இவருடைய விபரீதஜ்ஞாநத்திற்கு விளக்காகவே யிருக்குமென்னுமிடம் பெரிய திருமொழி (7-5-1) மருவிநின்ற என்ற பாசுரத்தை வெகு ஸாதகம்போல் இவர் எடுத்துக்காட்டி எழுதியுள்ள விவரணத்தினுல் நன்கு விளங்கும். [கீழே பக்கம் 14. காண்க.]

"எம்பெருமானர் தேவப்பெருமாளுக்கு ஆழ்வார்களின் மங்களாசாஸனம் இல்லையென்பதை அங்கீகரித்திறே * உயர்வற இத்யாதியை அவர் விஷயமாக இருக்கட்டுமென்று ஸமர்ப்பித்தது" என்று எழுதுகிருர். இப்படி இன்ன பூர்வாசார்யருடைய இன்ன க்ரந்தத்தில் ஸாதிக்கப்பட்டிருக்கிற தென்பதை இவர் ஒருவரி எழுதிவிட்டிருந்தால் தோற்ருேம் தோற்ருேமென்று தலைவணங்கி நிற்போமே. எந்த அம்மையார் புராணங்களை இவர் காலக்ஷேபம் செய்துவருகிருரோ அறியோம். ஆசார்ய ஸார்வபௌமரான கூரத்தாழ்வான் வரதராஜஸ்தவத்தில் "ஹஸ்தாநாம் யஷ்வஷிஉஹாஙம் வண்ணிதம் வண்ணீகம் யஷ்ாஜூாநம் வாஉ ஸதஹாயஹாஸநாஉாஸநாஜெவ ||
ஜுஹுாயாநாம் யஉவிவமிளொ யஹ்ஊஷூயஷா ஙாஙளெ: ஹஸ்ஜேரவஷா கிஉதிஸவஉம் தெஷ வாஉாஜயொவெஸ்" என்று அருளிச்செய்துள்ள ச்லோகத்தில் * யஹ் உஷூயஷா ஙாஙளெ: என்று அருளிச் செய்திருப்பதன் திருவுள்ளத்தை ஆழ்ந்து நோக்கினல் இவருடைய ப்ரலபிதங்களெல்லாம் பாறிப் பறந்துபோமே. ப்ரமாணலவலேசபுரஸ்காரமுமின்றியே தாந்தோன்றியாய்த் தாமெழுதிவிட்டுப் ஹுஉாணெகஙாஙணர்களைப் பழிப்பது பிசகு.

* உஹ்ஞஹஂஙயியொ உநிஸாவஷளெஉா: என்கிற தேசிக திவ்யஸூக்தியின் உண்மையான பொருள் தாண்டவ கண்டனத்தில் பரக்க நிரூபிக்கப்பட்டிருந்தும் அதற்கெல்லாம் அணுமாத்திரமும் வாய்திறவாமல் பத்திருபது வருஷங்களுக்குமுன் பரமபதித்த * களூர். சீமாச்சார் ஸ்வாமி என்பவரைப் பெரிய பூர்வாசார்யராக எழுதிக்கொண்டு கிடக்கிருர், எல்லாம் தலைகீழ்.

பெரியவாச்சான்பிள்ளை, வேதாந்ததேசிகன் முதலான பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த ஸ்ரீஸூக்திகளுக்கெல்லாம் மூலமாக, திருவரங்கத்தமுதனுருடைய திருக்குமாரரும் பட்டருடைய ஸாக்ஷாத் சிஷ்யருமான பிள்ளைப்பெருமாளையங்கார் தமது நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதியில் "அருளாளன் கச்சித்திருப்பதியா மத்தியூர்க்கண்ணன்

தாள்" என்று ஸுஸ்பஷ்டமாக அருளிச்செய்திருக்கிறாரென்பதைத் தாண்டவகண்டனத்தில் (பக்கம் 16ல்) விரிவாக எழுதியிருந்தும் அப்படிப்பட்ட உஹாவுராணிகவிலாஸூக்திகளில் சிறிதும் கண் செலுத்தாமல், இக்காலத்து அச்சுக்கூடத்தார் சிலர் இவரைப்போல வேப்ரமித்து ஏதோ எழுதிவைத்திருப்பதையே திருப்பித் திருப்பி எழுதிக்கொண்டு கிடக்கிறாரிவர். இராமாநுச நூற்றந்தாதிக்கு மேற்பட்ட உஞு மேயில்லையென்று இவர் தாமும் பேசுகிறாரே. அப்படிப்பட்ட நூற்றந்தாதியில் * தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப்பூண்ட வன்பாளனிராமாநுசன் என்று அருளிச்செய்திருக்கிறதே. இதில் * தென்னத்தியூரர் என்ற பதத்தினால் விவக்ஷிதர் தேவப்பெருமாளா? அழகியசிங்கரா? தேவப்பெருமாளன்று என்று படித்தவன் பகரமாட்டான், துராக்ரஹத்தினாலும் சுநஃயாஜ்ஞாநப் பெருமையினாலும் தத்தகபித்தகவென்று எதையும் கூசாமல் எழுதியே வழக்கப்பட்டவிவர் ஒருபடியாலும் வாதத்திற்கே சுஹுரல்லர் என்று நிற்போம். இவ்வளவு நாம் எழுதினதே அதிகம். மற்றும் எதிரியின் சுவடியிலுள்ள ப்ரஸங்கங்கள் அநுவதிக்கவும் தகாதவையென்று விட்டிட்டோம். "வரம்தரு என்று எச்சமாக மூலத்திலிருப்பதற்கு 'வரத்தைக் கொடுக்கிற' என்று அர்த்தமாகுமே யொழிய வரத்தைக்கொடுக்கிறவன் என்கிற அர்த்தம் ஏற்படாதென்பதை நீர் அறிந்துகொள்ளவில்லை" இத்யாதியாக இவர் எழுதியுள்ள வாக்கியமெல்லாம் அக்ஷராஸ்யர் கண்ணெடுத்துப் பார்க்கவும் தகாதவையல்லவா? இலக்கண வினா விடை கூடக் கேள்வியும் படாதவர்கள் எச்சம் சொச்சம் என்று எழுதி எதுக்குப் பரிபவப்படவேண்டும்?

உபஸம்ஹாரம்.

எதிரியின் சுவடியில் (பக்கம் 17-ல்) எழுதியிருப்பதாவது—சேட்லூர் ஸ்வாமியிடத்தில் பட்ட அபசாரத்திற்கு அவரிடமே க்ஷமை கொள்ளவேண்டுமாம்; இல்லாவிடில் அருநரகில் சாரநேருமாம். உடனே திருவயிந்திரபுரம்வந்து அபார கருணாநிதியான அந்த ஸ்வாமியின் திருவடிகளில் விழுந்து கைகளாலாரத் தொழவேணுமாம். ஆகவிப்படி அவருடைய நப்பாசைகள் காட்டப்பட்டிருக்கின்றன.

இதற்கு அடியேன் விஜ்ஞாபநம் செய்துகொள்வதாவது—அந்த சேட்லூர் ஸ்வாமியின் ஞானவூழல்களை அடியேன் நாலைந்து வருஷங்களுக்கு முன்னமே அச்சிட்டு வெளியிட்டிருக்கிறேன். அப்போது

அவர் சென்னையில் வாஸமாக இருந்ததனால் "இதற்கெல்லாம் என்ன ஸமாதானம் சொல்லுகிறீர்?" என்று ஒரு பிரதிநிதியை நேரில் அனுப்பிக் கேட்டுவரச் சொன்னேன். 'பதில் புஸ்தகம் அச்சுப்போட எனக்குப் பணமில்லை' என்று விடைசொல்லி யனுப்பினர். அதற்குமேல் அடியேன் சொல்லியனுப்பினேன்—"அதற்காக வருந்தவேண்டா; உத்தரம் எழுத சக்தியிருந்தால் தாராளமாக எழுதலாம்; எழுதி அடியேனிட மனுப்பிவிட்டால் அப்படியே 500 பிரதி அச்சிடுவித்து ஸ்வாமி ஸந்நிதிக்கு அனுப்புகிறேன்; இது ஸத்யம்" என்று.

அதற்குப்பிறகு அவருடைய மன்னிப்புக் கடிதம் கிடைத்ததே யொழிய வேறில்லை. அந்த மன்னிப்புக்கடிதம் இந்த நூலில் இரண்டாவது பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றது மீண்டும் வாசித்துப் பாருங்கள். அதையெல்லாம் மறந்து இப்போது ஏதோ எழுதுகிறார். எழுதட்டும்; பரமஸந்தோஷம். அடியேன் மாத்திரமன்று; நூற்றுக் கணக்கான—ஆயிரக்கணக்கான ஸுநாவபர்களுடன் அடியேன் வந்து இவரிடம் பணியத் தடையேயில்லை. வடமொழியிலும் தென்மொழியிலும் இவர் முழுமோசம் என்று ஏற்கனவே வெகுவிரிவாக வெளியிடப்பட்டுள்ளதென்பது வித்வான்களுக்கு ஞாபகத்திலேயே யிருக்கும். இவருடைய விபரீதஜ்ஞாநவிபவத்தை விளக்க அடியேன் காட்டியுள்ள விஷயங்கள் ஒன்றிரண்டல்ல. பலபல காட்டியிருக்கிறேன். அந்த விஷயங்களுள் ஒன்றுக்காவது இவர் ஜைநவான ஸமாதாநம் சொல்லிவிடுவாராகில் உடனே அடியேன் ஸபரிவாரனாய் இவரைப் பணியத் தடையுண்டோ? அரைகுறை யுணர்வினர் இவ்வுலகில் பலருண்டு. இருந்தாலும் இப்படி உலகை வஞ்சிப்பவர்கள் வேறுயாரேனு மிருப்பதாக அடியேன் நினைக்கவில்லேன், தாண்டவகண்டனம் அப்படி யிருக்கட்டும், சேஷாவதாரச் சிறப்பு அல்லது ஹேத்வாபாஸ நிராகரணம் இதை எடுத்துப் பாருங்கள்.

இப்போது இவர் வெளியிட்ட பிரலாப கண்டனச் சுவடியில் (பக்கம் 18-ல்) "வெள்ளத்தின் இடைப்பட்ட நரியைப்போல விழிக்கின்றீரே" என்று வெகு துணிவாய்க் கூசாமல் எழுதியிருக்கிறாரே, உண்மையில் இப்படி விழிக்கிறவர் இந்த ஸ்வாமியா? ஸ்ரீசைலரா என்பதை விவேகிகள் தாங்களே எளிதிற் கண்டறியலாம்.

1. இந்த சேட்லூர் ஸ்வாமி ஸ்தோத்ரபாஷ்ய மொழிபெயர்ப்பு வெளியிட்டார். அதன்முடிவில் பெரியவாச்சான் பிள்ளையை தூஷிப்பதற்கென்று தொடங்கி ஒரு அநுபந்தம் வெளியிட்டிருக்கிறார்.

“சில ஆக்ஷேப ஸமாதானங்கள்” என்று அதற்கு மகுடம் (ஹெட்டிங்கு) கொடுத்திருக்கிறார். அங்கு இவர் எழுதியிருக்கிற ஒவ்வொரு அக்ஷரத்தையும் தேசிக திவ்ய ஸூக்திகளைக்கொண்டே கண்டித்து அடியேன் வெளியிட்டிருக்கிறேன். அதற்கெல்லாம் இவர் உத்தரம் உரைக்கவேண்டா. அங்கு ஆக்ஷேப ஸமாதானங்கள் என்று இவர் மகுடம் வைத்து எழுதினாரே, அந்த மகுடத்திற்கும் அதன் கீழே யுள்ள விஷயங்களுக்கும் ஏதாவது ஸம்பந்தமுண்டா என்று அடியேன் கேட்டிருக்கிறேன். ஆக்ஷேபம் என்னவென்று? ஆக்ஷேபகர்த்தா யார்? ஸமாதானம் என்னவென்று? ஸமாதான கர்த்தா யார்? இத்யாதிகளை அடியேன் கேட்டிருக்கிறேன். இந்த ஒருவிஷயத்திற்காவது இவர் ஸமாதாநம் தெரிவித்தால் அன்றைக்கே இவரிடத்தில் திருவிலச்சினை பெற்றுக்கொள்ள ஸித்தனாயிருக்கிறேன்.

2. யதிராஜ ஸப்ததியிலுள்ள * ஸவ்யாக்ஷ திவஸய நய வைஃ வவ்யெவஞுலிநாயாயெஉஃநாரெஃ என்ற மிக ஸாதாரணமான ச்லோகத்தின் பொருளைக்கூட உள்ளபடி உணரமாட்டாத சேட்லூரார் ஸக்ஷநாவஸ்வபரிஹாவஸ்மாகவே அதற்கு அர்த்தமெழுதியுள்ளாரென்றும் கதஃபிவ்யயொமம் ஹரவெவ்ய யொமம் என்னும் சிறுவிஷயங்கூட இவர்க்குத்தெரியாதென்றும் சேஷாவதாரச் சிறப்பில் விவரித்திருக்கிறேன். “அந்த தூஷணத்தை இவர் என்றைக்கு வாரணஞ்செய்துகொண்டாலும் அன்றைக்கே இவர் பாதத்தில் பணிந்து ‘தேசிக தர்சநாசாரியர் இவரே’ யென்று பறைசாற்ற ஸித்தனாயிரா நின்றேன். இந்த வொன்றுக்கு விடையளித்தாலும் போதுமே” என்று தாண்டவகண்டனத்திலும் (பக்கம் 62-ல்) எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு இவர் ஸமாதானம் எழுதியிருந்தால் இவருடைய ஆஹ்வாநமில்லாமலே நாமே வந்து பணிந்து நின்றிருப்போமே. இனியாவது இதற்கு விடையளிப்பாராயின் இவர் நெற்றியிலுள்ள புண்ட்ரத்தையே இட்டுக்கொள்வேனென்பது ஸத்யம்.

3. *ஸஹிஹ்ருத்ரவ்ய ாஹணீவஸாநாவாநாஜிவஸ என்ற ஸச்சரித்ரரக்ஷா ஸூக்திக்கு இவர் தாம் எழுதியுள்ள பொருளுக்கிணங்க விக்ரஹம் சொல்லி விடுவாராகில் இவரை விக்ரஹமாகவைத்து ஆராதிக்க விவாதமேயிராது என்று தாண்டவகண்டனத்தில் (பக்கம் 63-ல்) எழுதப்பட்டிருக்கிறது, இனியாகிலும் இவர் அதற்கு விக்ரஹம் வெளியிடுவாராயின் இவர்க்குக் கோவில் கட்டிவைத்து சாச்வதமான ஏற்பாடுகளும் செய்துவைப்பேனென்பது உறுதி.

4. * ஸஹஸ்ராஸஹஸ்ரீ கவிகுலகூடஸ்தஃ என்ற ஷேஷாத்ரிஹாஷ்ராவஸாநஸூக்தியில் இரண்டு பதமானவதை ஸமஸ்த பதமாக்கி யுரைத்தவிவர்க்கு வ்யாகரணமே தெரியாதென்றும் * ஸஹஸ்ராஸஹஸ்ரீ என்றொரு க்ரந்தம் தேசிகன் ஸாதித்திருக் கிறாரென்று எழுதித் தமது விபரீதஜ்ஞாந விபவத்தை தேசிகசிகாமணி யின்மீதும் ஏற்றிவிட்டாரென்றும், இவர் நினைத்திருக்கிறபடி ஸமாஸம் ஒருநாளும் வாராதென்றும் நிரூபிக்கப்பட்டிருக்கிறதே. அதற்குச் சிறிது சோதிவாய் திறந்து பணிக்கலாகாதா? இனியாகிலும் பணிப்ப ரேல் சேட்லூர் ஸ்வாமியின் சேவடியே சென்னிக்கணி என்று வாய் வெருவி வீதியார வருவேன்.

5. இவையொன்றும் வேண்டா; இப்போதிவர் வெளியிட்டிருக் கிற சிறு சுவடியில் (பக்கம் 17ல் கடைசிவரியில்) "அபசார க்ஷாபணம் செய்து கொள்ளும்" என்று கிடக்கிறது. இதில் க்ஷாபணம் என்கிற பதத்தை எந்த அர்த்தத்தில் உபயோகித்திருக்கிறார்? என்கிற இந்த ஒரு கேள்விக்காவது இவர் விடையளித்திடுவரா? * சுத்ர ஹோஜஃ ஐதஸ்ராதிகள் இவர்க்குத் தெரிய ப்ரஸக்த்தியே யில்லா மையால் அதைப்பற்றி நாம் இங்கு எழுதவேண்டியதொன்றுமே யில்லை. வ்யுத்பத்தியும் தெரியாத பலர் 'க்ஷாபணம்' என்று ஸம் ப்ரதாய பரம்பரையாகச் சொல்லிவருகிறார்களே அதைத்தானே இவர் சரண மாகப்பற்றினர். இவ்விதமாகவே இவருடைய பேச்சுக்கள் யாவும் ஸம்ப்ரதாயைகஹோஸ்மென்று விசக்ஷணர் தெளிந்தே யிருப்பர்.

மேற்குறித்த ஐந்து விஷயங்களுக்கும் ஸஹ்ருதயஹ்ருதயங்கம மான ஸமாதாநம் வெளியிடுவாராயின் அதற்குப் பரிசாக நாம் இவரி டத்தில் பஞ்சஸம்ஸ்காரம் பெறுவோம். இவ்விதமாக அடியேனை அடிமைப்படுத்திக்கொள்ள இவர்க்கு எளிதான உபாயத்தைக் காட்டி யிருந்தும் இவர் இழப்பாராயின் சோசிக்கவேண்டியதேயாம். எதற்கு? இவருடைய ஸத்தைக்கு.

சேட்லூரார் மாய மயக்கம் முற்றிற்று.

ஸ்ரீமுகஸூ மார்கழிமீ
கீழ்வானம் வெள்ளென்று. } காஞ்சீ. அண்ணங்கராசாரியர்.

800 009
17665

ஸ்ரீ:

இந்நூலின் ஸாரமான ஒரு விஷயம்.

சேட்லூர் ஸ்வாமியானவர் ஆழ்வாராசார்ய ஸ்ரீஸூக்திகளில் * வரந்தரும் * அருளாளன் * இத்யாதிகளுக்கு லௌகிகமான அர்த்தத்தையே கொள்ளவேண்டுமென்கிறார். அப்படியே கொள்ளுவோம். இதனால் இவர்க்கு என்ன இஷ்டஸித்தியாகும்? * பனிவரையினுச்சியாய் பவளவண்ணா! * கார்வானத்துள்ளாய் கள்வா! * இத்யாதிகளான பலவிடங்களில் பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்திருக்கும் வியாக்கியான ரீதியை ஸேவித்தால் ஒரு திவ்யதேச விஷயமான பாசுரமென்பது சிறிதும் தோன்றாமல் ஸாமாந்யமாய் பகவத்குணாநுபவமாகவே ப்ரதிபத்தி பண்ணலாயிருக்கும். தாவதா அந்தப் பாசுரங்கொண்டே ஸித்திக்கவேண்டியதான திவ்யதேசத்வம் அபலபிக்கமுடியாதன்றோ. 'கபிஸ்தலம் திவ்யதேசமல்லவென்றால் யாதொரு ஹாநியுமில்லை' என்றெழுதியிருக்கிற சேட்லூரார் திருப்பவளவண்ணமும் திருக்கள்வனூரும் திவ்யதேசமாக இருக்கவேண்டாமே என்று ஸஹஸா சொல்லிவிடுவர். நூற்றெட்டுத் திருப்பதியென்று தொன்றுதொட்டு ஆசாரியர்கள் அநுஸந்தித்துவருகிற ஒரு ப்ரக்ரியையைப் பரிபாலிக்கவேண்டியது உண்மையான ஸ்ரீவைஷ்ணவர்களின் முக்கியமான கடமை. நூற்றெட்டென்கிற கணக்கு இணங்குவதற்கு வேறு எந்த க்ஷேத்ரத்தையாவது கூட்டிக்கொள்ளப் பின்புள்ளார் ஸஹஸா துணியாமைக்காகவே பிள்ளைப்பெருமாள் அரிய வெண்பாவினால் நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி பாடிவைத்தார். அவர் பவளவண்ணனையும் கள்வனையும் விட்டிலர். அருளாளனையும் விட்டிலர். ஆக இவ்வளவும் நாம் நிரூபித்ததனால் * வரந்தருமாமணிவண்ணனிடம் என்றவிடத்தில் பெரியவாச்சான்பிள்ளை ஹஸ்திகிரியிலிருக்கிற வரதன் என்று அருளிச்செய்யவில்லையென்று சேட்லூரார் எழுதியுள்ள குசோத்யம் செல்லமாட்டாதென்று மூதலிக்கப்பட்டது. வ்யாக்யாதாக்களான ஆசார்யர்கள் குணாநுபவம் செய்துகொண்டு போகிறவர்களிறே. மேலும் இந்த வமெவஃகளெல்லாம் இந்த இடம்பெற ப்ரஸக்தியேயில்லை. தாஷ்யதாந்யாயத்தாலே சேட்லூரார்க்காக இந்த விரிவு நேர்ந்தது. ஹஸ்திகிரியென்பது ஆழ்வார் பாடல்பெற்றது என்கிறவளவே ஸாதநீயாம்ஸம். அது இவர் தம்மாலும் மறுக்கவொண்ணாதபடி ஸித்தித்தேயிருக்கும்போது மற்ற விசாரங்களெல்லாம் காடுபாயுங் கதையேயாம்.

சேட்லூராரைப்பற்றி அடியேனும் அடியேனைச் சேர்ந்தவரும் வெளியிட்டிருக்கிற புஸ்தகங்களிலுள்ள நூற்றுக்கணக்கான விஷயங்களுள் ஒன்றுக்குக்கூட அவரால் உத்தரம் உரைக்கமுடியாதென்பதை அடியேன் எந்த இடத்திலும் எந்த காலத்திலும் எந்த மத்யஸ்தர் முன்னிலையிலும் எந்த நிபந்தனையின்படியும் ஸ்தாபிக்க தயார். இதுவே எதிரியின் பஹிரங்கக் கடிதத்திற்கு பஹிரங்க பதில்.

P. B. A.